## சுருக்கம்

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் – மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய அலுவலக உபயோகத்திற்கான எழுது பொருட்களை நிரந்தரமான அடிப்படையில் இலவசமாக வழங்க – அனுமதித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல(சி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.200

நாள்.10.07.2015
திருவள்ளுவர் ஆண்டு 2046,
மன்மத, ஆனி 25

படிக்க

1) அரசு ஆணை (நிலை) எண்.1, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை (சி2) நாள் 2.01.2012.
2) அரசு ஆணை (ப) எண்.129, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை (சி2) நாள் 12.02.2013.
3) அரசு ஆணை (ப) எண்.340, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை (சி2) நாள் 3.04.2014.

படிக்கப்பட்டது:

4) தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அவர்களின் கடித எண்.1413/மபதேவா/நி2/14 நாள்.08.04.2015.

----

**ஆணை:-**

மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அவர்கள், அரசு ஆணை (நிலை) எண்.1, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநல(சி2)த் துறை, நாள் 2.01.2012–ன்படி மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் என்ற அரசு சார்ந்த அமைப்பு உருவாக்கப்பட்டு, 06.02.2012 முதல் செயல்பட்டு வருகிறது எனவும், தமிழ்நாடு அரசு மருத்துவ நிலையங்களில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களை நிரப்பவும் மற்றும் புதியதாக உருவாக்கப்படும் பணியிடங்களை நிரப்பவும் இவ்வாரியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அரசு ஆணை (ப) எண்.129, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை (சி2) நாள் 12.02.2013ல் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்திற்கு போதிய நிதி ஆதாரம் ஏதும் இல்லாத நிலையில் முதல் இரண்டு வருடங்களுக்கு மட்டும் எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கடித உறைகள், அரசிதழ் மற்றும் தமிழரசு பத்திரிக்கைகளை இலவசமாக வழங்குவதற்கு விலக்களிக்கப்பட்ட ஆணையும், இரண்டு வருடங்களுக்கு பின்பு நடைமுறையில் உள்ள விதிகளின்படி முன்பணம் அடிப்படையில் எழுதுபொருட்கள் வழங்கவும் இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது எனவும், அரசு ஆணை (ப) எண்.340, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை (சி2) நாள் 3.04.2014ல் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்திற்கு எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், கடித உறைகள் மற்றும் அரசிதழ் போன்றவைகளை 2014–15 மற்றும் 2015–16 ஆகிய 2 ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அவர்கள், வாரியம் துவங்கப்பட்ட நாளில் இருந்து இதுநாள்வரை 6918 எண்ணிக்கையில் பல்வேறு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்றும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், வாரியத்தில் ஓரிரு பணியிடங்கள் தவிர்த்து அனைத்து பணியிடங்களும் எவ்வித விண்ணப்ப கட்டணமுமின்றி பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால் நிதி ஆதாரம் இல்லாத அரசுத்துறையாக செயல்பட்டு வருவதால், மற்ற அரசுத் துறைகளுக்கு வழங்கப்படுவதைப் போலவே அவ்வாரியத்திற்கும் எழுதுபொருட்களை 2016ம் ஆண்டுக்குப் பின்னரும் நிரந்தர அடிப்படையில், இலவசமாக வழங்கிட ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

3. மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் நிதி ஆதாரம் இல்லாத அரசுத்துறையாக செயல்பட்டு வருவதால் மற்ற அரசு துறைகள் போலவே அவ்வாரியத்திற்கும் 2016ம் ஆண்டுக்குப் பின்னரும் ஆண்டுதோறும் எழுதுபொருட்களை இலவசமாக வழங்கிட, இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறையின் அலுவல் சார்பற்றக் குறிப்பு எண்.9891/ஏஅ–II(2)/2015-2, நாள் 7.07.2015ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு செயலாளர்

பெறுநர்
தலைவர்,
மருத்துவப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–600 006.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை–600 002.
<u>நகல்</u>
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (ஏஅ2.2) துறை, சென்னை–600 009.
✓ மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தரவு பிரிவு) துறை, சென்னை–600 009.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature]
பிரிவு அலுவலர்
16/7/15